[2011 ஜனவரி 12

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 22, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

22—

கட்டட வசதி

54555—திரு. கே.பி. இராமசுவாமி:

மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ராசிபுரம் சார்பு நீதிமன்றத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. துரைமுருகன், சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ராசிபுரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்டுவதற்காக ரூ.465.20 இலட்சத்திற்கு ஒப்புதலளித்து 16–8–2010 அன்று அரசு ஆணை வெளியிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. இராமசுவாமி, இருக்கையில் இல்லை. அவருக்கு மாற்றாக மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். அன்பழகன்.*

திரு. எம். அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் ராசிபுரம் தொகுதிக்கு நிதி ஒதுக்கித் தந்து, அதனை அறிவித்ததற்காக ராசிபுரம் தொகுதி மக்களின் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பணியை எப்பொழுது துவக்குவார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.*

2011 ஜனவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்வியே ராசிபுரம் தொகுதியைப் பற்றியது. Supplement போட்டவர் பழனி தொகுதியைச் சேர்ந்தவர். அதிலே ஒரு detail வேறு கேட்கிறார்.

பேரவைத் தலைவர் அவர்களே, டெண்டர் கோரப்பட்டது *24–11–2010*. Pre–qualification approved on 4–1–2011. Price tender submitted to the Chief Engineer by S.E. on 6–1–2011.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி, நிறைய recommendations வருகின்றன.

திருமதி எஸ். தேன்மொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தொகுதி பொதுமக்கள் மற்றும் வழக்கறிஞர்களின் நீண்டநாள் கோரிக்கையான சார்பு நீதிமன்றம் அமைக்கும் பணி நீண்டநாட்களாகியும் நிறைவேற்றப்படவில்லை. உயர் நீதிமன்றம் பரிசீலனை செய்தும், சார்பு நீதிமன்றம் அமைப்பதற்கு அனுமதி வழங்கியும், அதற்குரிய கட்டடம் ஒதுக்கப்படாததால், பொதுமக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். நிலக்கோட்டை மையப் பகுதியில் உரிமையியல் நீதிமன்றம் மற்றும் குற்றவியல் நீதிமன்றம் அமைந்துள்ள இடத்தில் பொதுப் பணித் துறைக்குச் சொந்தமான கட்டடம் வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. ஏற்கெனவே தற்காலிகமாக அரசு மகளிர் கலைக் கல்லூரி இயங்கி வந்த கட்டடம் வெறும் தளவாடச் சாமான்கள் மட்டும் போடப்பட்டு காலியாக உள்ளது. இதுபற்றி ஏற்கெனவே இதே அவையில் நான் பேசியுள்ளேன். இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்று அறிவித்துள்ளது. மக்கள் நலன் கருதி, எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர் என்ற காழ்ப்புணர்ச்சி பாராமல், ஏற்கெனவே காலியாக இருக்கும் இடத்தை உடனடியாக ஒதுக்கித் தந்து, சார்பு நீதிமன்றம் அமைத்திட இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன். இன்றுகூட

[2011 ஜனவரி 12

நிலக்கோட்டை தொகுதியில் பொதுமக்கள் போராட்டம் நடத்துகிறார்கள். இதில் அரசு தனிக் கவனம் செலுத்தி, உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. துரைமுருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல், ஒரு நீதிமன்றத்திற்குக் கட்டடம் கட்டுவது, இடத்தைத் தேர்வு செய்வது, நாம் அல்ல. High Court, நமக்கு இந்த இடத்திலே கட்டடம் கட்டலாம், இந்த இடத்திலே Sub–Court கட்டலாம் என்று சொல்வார்கள். நாம் பணத்தை ஒதுக்குவோம். ஆனால், அதற்குரிய இடத்தை அவர்கள்தான் அங்கிருக்கக்கூடிய District Judge உடன் சேர்ந்து நமக்குத் தெரிவு செய்து தரவேண்டும். நீங்கள் சொல்வதுபோல, அங்கே ஒரு இடம் இருக்கிறது, இங்கே chair போட்டிருக்கிறார்கள், இதெல்லாம் நன்றாக இல்லை. நீங்கள் கண்டுபிடித்துக் கொடுத்திருக்கிறீர்கள். அதனைப் பாராட்டுகிறேன். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் என்ற முறையிலே நீங்கள் என்ன செய்திருக்க வேண்டும்? அங்கிருக்கிற நீதிபதியிடம் சொல்லி, அவர்கள்மூலம் High Court–க்கு தெரிவித்து, High Court team வந்து பார்த்து, அவர்கள் satisfy ஆனால்தான் அந்த இடத்தை ஒத்துக்கொள்வார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எதிர்க்கட்சி என்பதனாலே, நாங்கள் பாரபட்சம் காட்டுவோம் என்று சொல்லமாட்டோம். நிச்சயமாக பாரபட்சமில்லாமல், ரொம்ப அன்போடு, பாசத்தோடு, அந்த இடத்தில் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்ற உறுதியை வழங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்–விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY — TRUTH ALONE TRIUMPHS